# தாயுமானவரும் குணங்குடியாரும் – ஓர் ஒப்பீடு

**Mrs. MASF. Saadhiya(1) and Ms. S.Selvakumari (2)**

(1) Department of Languages, South Eastern University of Sri Lanka.
(2 Department of Languages, South Eastern University of Sri Lanka.
(saadhiyas@gmail.com, Selvakumari.selva@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம்**

*திருச்சிராப்பள்ளியில் சைவ வேளாளர் மரபில் கேடிலியப்பப்பிள்ளை , கஜவல்லி அம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர் தாயுமான சுவாமிகள். இவரால் பாடப்பட்ட பாடல்களின் தொகுதிக்கு தாயுமானசுவாமி திருப்பாடல்கள் என்று பெயர். இவரது பாடல்கள் திருவருள் பரசிவ வணக்கம் தொடக்கம் அகவல், வண்ணம் என ஐம்பத்தாறு தலைப்புக்களில் அமைந்துள்ளன.*

*கி. பி 1792 இல் தமிழகத்தில் குணங்குடி என்ற ஊரில் நயினார் முகமது சாகிபு, பாத்திமா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர் மஸ்தான் சாகிபு, காதிரியா நெறிப்படி வாழ்ந்த ஒரு சூ.்.பி ஆவார். இவரது பாடல்கள் சூபித்துவ சிந்தனைகளின் வெளிப்பாடாக அமைந்திருப்பதனைக் காணலாம்.*

*தாயுமானவரின் திருப்பாடல்களைத் தழுவி, குணங்குடியாரின் திருப்பாடல்களும் அமைந்துள்ளன. கடவுளின் சர்வ வியாபகம், அவதாரக் கோட்பாடு, நாயகன் நாயகி பாவம், மாயா தத்துவம், வினைக் கோட்பாடு, பஞ்ச சுத்தி, அத்துவிதம், குண்டலினி சக்தி, அட்டமா சித்தி, அட்டாங்கயோகம், தவம், முத்தி, அனுபூதி, உருவ வழிபாடு, குருபாரம்பரியம், சித்துநெறி, சன்மார்க்கம், மூர்த்தி, தல , தீர்த்த வழிபாடு எனப் பல அம்சங்களில் இருவரது பாடல்களும் ஒற்றுமைப் படுகின்றன. அவற்றினை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது.*

***விளக்கச் சொற்கள்:*** *அனிய்யத், குருபாரம்பரியம், பஞ்ச சுத்தி, அத்வைதம்.*

**அறிமுகம்**

வேதாரணியம் என வழங்கப்படும் திருச்சிராப்பள்ளியில் சைவ மரபில் கேடிலியப்பபிள்ளை, கஜவல்லி அம்மையார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர் தாயுமான சுவாமிகள். இவரால் பாடப்பட்ட பாடல்களின் தொகுதிக்கு தாயுமானசுவாமி திருப்பாடல்கள் என்று பெயர். இப்பாடல்கள் பரிபூரானானந்தம், பொருள் வணக்கம், சின்மயானந்த குரு, மௌன குரு வணக்கம், கருணாகரக்கடவுள், சித்தர்கணம், ஆனந்தமான பரம், சுகவாரி, எங்கும் நிறைகின்ற பொருள், சச்சிதானந்த சிவம், தேசோமயானந்தம், சிற்சுகோதயவிலாசம், ஆகார புவனம் - சிதம்பர இரகசியம், தேன்முகம், பன்மாலை, நினைவொன்று, பொன்னை மாதரை, ஆரணம், சொல்லற்கரிய , வம்பனேன், சிவன் செயல், தன்னையொருவர், ஆசையெனும், எனக்கெனச் செயல், மண்டலத்தின், பாயப்புலி, உடல் பொய்யுறவு, ஏசற்ற அந்நிலை, காடுங்கரையும், எடுத்த தேகம், முகமெலாம், திடமுறவே, கற்புறுசிந்தை, மலைவளர் காதலி, அகிலாண்ட நாயகி, பெரியநாயகி, தந்தை தாய், பெற்றவட்கே, கல்லாலின், பராபரக்கண்ணி, பைங்கிளிக்கண்ணி, எந்நாட் கண்ணி, காண்பேணோ என் கண்ணி, ஆகாதோ என் கண்ணி, இல்லையோ என் கண்ணி, வேண்டாவோ என் கண்ணி. நல்லறிவே என் கண்ணி, பலவகைக்கண்ணி, நின்ற நிலை, பாடுகின்ற பனுவல், ஆனந்தக்களிப்பு, அகவல் , வண்ணம் என ஐம்பத்தாறு தலைப்புகளில் அமைந்துள்ளன.

கி. பி 1792 இல் தமிழகத்தில் குணங்குடி என்ற ஊரில் நயினார் முகமது சாகிபு, பாத்திமா ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர் மஸ்தான் சாகிபு. இவர் காதிரியா நெறிப்படி வாழ்ந்த சூ.்.பி ஆவார். இவரது பாடல்கள் ஆனந்தப்பத்து , முகியீத்தீன் சதகம், அகத்தீசன் சதகம், மகுமூது நபியாண்டவர் துதி, தவமே பெற வேண்டுமெனல், குறையிரங்கியுரைத்தல், தவராஜ மகிமை சாற்றல், வானருள் பெற்றோர், ஆன்ந்தக்கண்ணி, நிராமயக்கண்ணி, பராபரக்கண்ணி, எக்காலக்கண்ணி, கண்மணிமாலைக்கண்ணி, மனோன்மணிக்கண்ணி, நந்தீஸ்வரக்கண்ணி, கீர்த்தனைகள் எனப் பல வகைப்படும்.

தாயுமானவரின் திருப்பாடல்களைத் தழுவியதாக குணங்குடியாரின் அதிகமான திருப்பாடல்கள் அமைந்துள்ளன. கடவுளின் சர்வ வியாபகம், அவதாரக்கோட்பாடு, நாயகன் நாயகி பாவம், மாயா தத்துவம், வினைக் கோட்பாடு, பஞ்ச சுத்தி, அத்துவிதம், நாயகன் நாயகி பாவம், குண்டலினி சக்தி, அட்டமா சித்தி, அட்டாங்கயோகம், தவம், முத்தி, அனுபூதி,

உருவ வழிபாடு, குருபாரம்பரியம், சித்துநெறி, சன்மார்க்கம், மூர்த்தி, தல , தீர்த்த வழிபாடு எனப் பல அம்சங்களில் இருவரது பாடல்களும் ஒருமித்த கருத்தினை வெளிப்படுத்துகின்றன.

இருவரது பாடல்களிலும் குருபாரம்பரியம் முக்கியத்துவப்படுத்தப் படுகின்றது. குருவின் சிறப்பினை போற்றும் வகையில் இருவரது பாடல்களிலும் குருவினை ஞான குரு, மௌன குரு, காரணகுரு என பல படிமங்களில் வைத்து நோக்கியிருப்பதை அவதானிக்க முடியும்.

மேலும், இவர்கள் தம்மை ஆட்கொண்ட குருவினை தாய், தந்தைக்கு சமமாக வைத்து நோக்குவதோடு தமக்கு உயிர்த் துணை, குரு என்பதனைப் புலப்படுத்துகின்றனர். இக்கருத்தினை தாயுமானவர்,

"அன்னை அப்பன் ஆவித் துணையெனும்

தன்னை ஒப்பற்ற சற்குரு என்பதேன்

என்னைப் பூரண இன்ப வெளிக்குளே

துன்ன வைத்த சுடரெனத் தக்கதே" (பொன்னை மாதரை : 218)

(மாணிக்கனார். அ., (1996), முதல் தொகுதி, ப. 230)

"அப்பன் என்றும் அன்னையென்றும் ஆரியன் என்றும் உனையே

செப்புவது முன்னிலையின் சீர்காண் பராபரமே"( பராபரக்கண்ணி: 917)

(மாணிக்கனார். அ., (1996), இரண்டாம் தொகுதி, ப. 171)

எனக்கூற, குணங்குடியார் தன்னை ஈன்ற தாயாகவும், தந்தையாகவும், தன்னுயிர்த் துணையாகவும், தனக்கு அருள்தந்தவராகவும் குருவினைப் போற்றுகிறார். இக்கருத்தினை பின்வரும் பாடல் அடிகள் புலப்படுத்துகின்றன.

"....தந்தைதா யாகியருள் தந்தகுரு வாகியென்

தன்னுயிர்க் குயிரு மாகித்

தாயிற் சிறந்தவந் நேயச் சிறப்பாய்ச்..." (முகியீத்தீன் சதகம்: 23)

(அப்துல் ரகுமான், (2002), ப.82 )

எனக் கூறுவதனூடாக அறியலாம். குருவின் திருப்பாதத்தின் சிறப்பினை போற்றுவதிலும் இருவரது பாடல்களும் ஒருமித்த கருத்துடையனவே. இக்கருத்தினை தாயுமானவர்,

"......தேவனும் மௌனி செம்பொற்

சேவடிசிந்தை செய்வாம்" (ஆசையெனும்: 336)

(மாணிக்கனார். அ., (1996), முதல் தொகுதி, ப. 293)

என்றும், குணங்குடியார்,

"......குருபதஞ் சிரத்தின்மேற் கொள்வோம்" (ஆநந்தப்பத்து)

(அப்துல் ரகுமான், (2002), ப.63 )

என்றும் கூறுவதனூடாக இதனை அறியலாம். தாயுமானவர் தென்முகக் கடவுளான தட்சிணாமூர்த்தியினை மௌனகுருவாகச் சிறப்பிக்க, குணங்குடியார் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி அவர்களை மௌன குருவாகப் போற்றுகிறார்.

இருவரது பாடல்களிலும் இறைவனோடு இரண்டறக் கலத்தல் என்ற அம்சம் காணப்படுகிறது. தாயுமானவர் தமது பாடல்களில் தான் கடவுளை காதலிப்பதாக அமையும் நாயகன் நாயகிப் பாவனையை சிறப்பாகக் கையாண்டுள்ளார். இதனைப் பின்பற்றி, இறைவனை ஒரு பெண்ணுக்கு சமமாக வைத்து உருவகம் செய்து அப்பெண்ணை தமது காதலியாகக் கொண்டு கூடுவதையும் ஊடுவதையும் பலவாறு பாடிச் செல்கிறார் குணங்குடியார். இதில் இஸ்லாத்திற்கு முற்றிலும் முரண்பட்ட வகையில் தம் காதலியாக கொண்ட இறைவனை விரசமான முறையில் அங்க வர்ணனையும் செய்துள்ளார். இறைவனோடு கலக்கும் பேரின்ப நிலை என்ற பெயரில் சிற்றின்பம் சார்ந்த விடயங்களை தம் பாடல்களில் கையாண்டிருப்பதை நிராமயக்கண்ணி, பராபரக்கண்ணி, ரஹ்மான் கண்ணி, மனோண்மணிக்கண்ணி முதலிய கண்ணி வகைப்பாடல்களில் பரவலாகக் கண்டுகொள்ள முடியும். மனோண்மணிக்கண்ணியில், இறைவனை மனோன்மணி எனும் பெண்ணாக உருவகித்து தம் விரகதாபங்களை எல்லாம் விபரித்துப் பாடுகிறார்.

மாயாதத்துவக் கோட்பாட்டிலும் இவர்கள் கொண்டிருந்த நம்பிக்கையை இவர்களது இப்பாடல்கள் சித்திரிக்கின்றன. மாயையின் செயலே மனம் என்பதில் உறுதி பூண்ட வகையில்,

"....மடம்பெறு மாயை மனமே...." (பாயப்புலி: 417)

(மாணிக்கனார். அ., (1996), முதல் தொகுதி, ப. 338)

எனத் தாயுமானவர் கூற, குணங்குடியார் ஆன்மா பக்குவமடைவதற்கு தடையாக இருப்பது மாயை

என்றும் அதனை அழிக்க வேண்டும் என்றும் பின்வருமாறு பாடியுள்ளார்,

"……….மனமாயை

தீய்ந்திடவு மருள் புரியவுந்"

……………………………"
(அகத்தீசன் சதகம்: 22)

(அப்துல் ரகுமான், (2002), ப.138)

"….மண்ணான காமக் குரோதமுண் டிடுவனோ

மாயைதனை வென்றிடுவேனோ…."
(முகியித்தீன் சதகம்: 38)

(அப்துல் ரகுமான், (2002), ப.90)

மேலும், இப்பாடல்கள், மனம், மனதின் செயற்பாடுகள், மனம் ஒடுங்குவதற்கான வழிகள், மனம் - மாயை என்பனவற்றிற்கிடையிலான தொடர்புகள் முதலியன பற்றிப் பேசுகின்றன. இறைத்திருவருளினை அடைவதற்குப் பஞ்சமா பாதகங்கள் தடையாக உள்ளன என்பதில் இருவரும் உடன்பாடுடையவர்களே. அதாவது, கொலை, களவு, கள், காமம், கோபம் இவற்றினின்றும் ஒருவர் விடுபடுவதன் மூலமே அவருக்குத் திருவருள் கிடைக்கப்பெறும் என்கின்றனர்.

இதனைத் தாயுமானவர்,

"கொலை களவு கள்காமம் கோபம்விட்டா லன்றோ

மலைஇலக்கா நின்னருள்தான் வாய்க்கும் பராபரமே" (பராபரக்கண்ணி: 923)

(மாணிக்கனார். அ., (1996), இரண்டாம் தொகுதி, ப. 173)

எனக் கூற, குணங்குடியார்,

"பொய்கொலை களவு காமம் பொருள் நகை

இவ்வகை எவையும் அடக்கல் இயமமும்…" (அகத்தீசன் சதகம்: 31)

(அப்துல் ரகுமான், (2002), ப.142)

எனக் கூறுகிறார். பஞ்சசுத்தி பற்றி பேசுகின்ற போது, தாயுமானவர் பின்வரும் விளத்தினை கூறுகிறார். அதாவது, சிவமெய்யுணர்வு பெறுவதற்கு பூதத் தூய்மை, உடல் தூய்மை, பொருள் தூய்மை, ஆன்மத் தூய்மை, மந்திரத் தூய்மை ஆகிய ஐவகை தூய்மைகளைச் செய்து வழிபாடாற்ற வேண்டும் எனக் கூறுகிறார். இதனை விளக்குவதாகவே பின்வரும் பாடல் அமைந்துள்ளது,

"பஞ்சசுத்தி செய்து நின்னைப் பாவித்துப் பூசை செய்தால்

விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே"
(பராபரக் கண்ணி : 789)

(மாணிக்கனார். அ., (1996), இரண்டாம் தொகுதி, ப. 136)

குணங்குடியார் கூறுகையில், தான் பஞ்ச சுத்தி செய்து இறைவனை அடைந்ததாகக் கூறுகிறார். குணங்குடியார் கூறும் பஞ்ச சுத்திகளாவன சூபி மரபின் அடிப்படையிலாகும். அதாவது, செய்த பாவங்களுக்கு வருந்தி அவற்றினின்றும் விடுபடல், தீய பழக்க வழக்கங்களினின்று விடுபடல், உறவினர் பாசத்தினின்று விடுபடல், காம இச்சையினின்று விடுபடல், 'தான்' என்பது பரம்பொருளினின்றும் வேறானது என எண்ணும் அனிய்யத் என்ற மாயையினின்றும் விடுபடல் என்பன. இதனைப் பின்வரும் பாடல் அடிகளின் மூலம் கண்டுகொள்ள முடியும்,

"பஞ்சசுத்தி செய்த பவழடியார் என்னவுன்னை

அஞ்சலி செய்தே யடைந்தேன் நிராமயமே"
(நிராமயக்கண்ணி: 162)

(அப்துல் ரகுமான், (2002), ப.209)

தன்னை மறந்து ஆடுதல், அன்பு மேலிட்டுப் பாடுதல், தலங்கள் தோறும் இறைவனைத் தேடித்திரிதல் என்பன அடியார்களின் செயற்பாடுகளாகும் என்ற கருத்திலும் இருவரிடமும் ஒருமைப்பாடு காணப்படுகின்றது. இதனைத் தாயுமானவர்,

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாகநின்னைத்

தேடுவதும் நின்அடியார் செய்கை பராபரமே"
(பராபரக்கண்ணி: 776)

(மாணிக்கனார். அ., (1996), இரண்டாம் தொகுதி, ப. 132)

எனவும், குணங்குடியார்,

"தேடுவதும் நாடுவதும் சிந்தைத் திருநடனம்

ஆடுதும் உன்னடியார்க்கு ஆசை நிராமயமே"
(நிராமயக்கண்ணி: 149)

(அப்துல் ரகுமான், (2002), ப.208)

எனவும் பாடியுள்ளனர். இறைத்திருவருளினைப் பெறுவதற்கு தவம் அவசியம் என்பதனை பிரதிபலிக்கும் வகையில் தாயுமானவர்,

“செய்யும் தவம்சற்றும் இல்லாத

நான் உன் திருவடிக்கே

……………………………

உய்யும் படிக்கருள் செய்வதென்

றோ புலியூர் அத்தனே” (பாயப்புலி: 403)

(மாணிக்கனார். அ., (1996), முதல் தொகுதி, ப. 329)

என்றும் , குணங்குடியார்,

“….நற்றவமு முத்தியுஞ் சித்தம்வைத் தருள்செய

நாட்செல்லு மோவ றிகிலேன்…” (ஆநந்தப் பத்து: 9)

(அப்துல் ரகுமான், (2002), ப.68)

என்றும் பாடியுள்ளனர். பசு, பதி, பாசம் போன்ற சைவசித்தாந்த முத்திரைச் சொற்களை தாயுமானவர் பின்வருமாறு கையாண்டுள்ளாமர்,

“கேடில்பசு பாசமெல்லாங் கீழப்படவும் தானேமேல்

ஆடம் சுகப்பொருளுக்குக் கன்புறுவ தெந்நாளோ” (எந்நாட்கண்ணி: 1196)

(மாணிக்கனார். அ., (1996), முதல் தொகுதி, ப. 252)

இதனையே குணங்குடியார் தமது பரிபாஷையில்,

“மாயும் பசு பாசம் மடிய மடிய அருள்

தாயனைய இன்பம் தாராய் நிராமயமே” (நிராமயக்கண்ணி: 27)

(அப்துல் ரகுமான், (2002), ப.200)

எனப்பாடுகிறார். மேலும், பாசவினைகளை அறுத்தெரிந்து மடியச் செய்வதற்காக ஞானவாளை வீசுவது எந்நாளோ என பின்வருமாறு ஏங்கிப் பாடுகிறார்‘ தாயுமானவர்.

“ பாசசா லங்கள்எல்லாம் பற்றிவிட ஞானவை வாள்

வீசுநாள் எந்நாள் விளம்பாய் பராபரமே” (பாராபரக்கண்ணி: 811)

(மாணிக்கனார். அ., (1996), இரண்டாம் தொகுதி, ப.143)

இதனையே குணங்குடியார்,

“பாச வினையெல்லாம் பரந்திட மெய்ஞ்ஞான வைவால் வீச அருள்தானே விளக்காய் நிராமயமே”

எனப் பாடுகிறார். சைவசித்தாந்தத்தில் இடம் பெறும் ‘நமசிவாய’ என்ற ஐந்தெழுத்துக்களும் பஞ்சாட்சரமாகக் கொள்ளப்படுகிறது. இந்த பஞ்சாட்சரத்தினையே ஞான வாளாகக் கொள்வதாகக் குணங்குடியார் தமது நிராமயக்கண்ணியில் குறிப்பிட்டுள்ளாார்.

இவர்களது பாடல்கள் அத்வைதம் என்ற சொல்லட்சியினை கையாள்வதிலும் ஒருமைப்பாடுடையன. அத்துவிதம் என்பதற்கு இரண்டற்றது என்பது பொருளாகும். அதாவது, பரம்பொருளும், ஆன்மாவும் ஒன்றென்பதாகும். இறைவனுடன் ஐக்கியப்பட்டு ஒன்றுபட்டு நிற்கும் நிலையே சுத்தாத்விதமாகும் எனத் தாயுமானவர் கூறுகிறார். இதனை,

அத்துவித மான அயிக்கிய அனுபவமே

சுத்தநிலை அந்நிலை யார் சொல்வார் பராபரமே” (பராபரக்கண்ணி: 928)

(மாணிக்கனார். அ., (1996), இரண்டாம் தொகுதி, ப. 175)

என்றும், குணங்குடியார்,

“…..அத்துவித வத்துமுன் னிற்கவே யறிவகண்

…………………” (முகியித்தீன் சதகம்: 1)

(அப்துல் ரகுமான், (2002), ப.71)

என்றும் குறிப்பிட்டுள்ளனர். கடவுளின் அருவுருவத்திரு மேனியினை தாயுமானவர்,

“குன்றாத மூவுருவாய் அருவாய் ஞானக்

கொழுந்தாகி அறுசமயக் கூத்தும் ஆடி………. ” (பன்மாலை: 182)

(மாணிக்கனார். அ., (1996), முதல் தொகுதி, ப. 210)

எனக் கூற, குணங்குடியார்,

“அந்தமுதல் முன்பின்னொடு பக்கநடுவாகி நின்று

அவைக எற்றது வுமாகி

அருவாகி உருவாகி அருவுருவம் அற்ற அறிவு

ஆகார மோன மாகித்……..'' (முகியித்தீன் சதகம்)

(அப்துல் ரகுமான், (2002), ப.82)

எனக் கூறுகிறார்.

அட்டாங்க யோகங்களாகிய இயமம் , நியமம், ஆசனம் பிராணாயாகாரம், பிரத்தியாகாரம், தாரணை தியானம், சமாதி பற்றிய குறிப்புகளும் இவர்களது பாடல்களில் இடம்பெற்றுள்ளன. தாயுமானவர் பராபரக்கண்ணியில்,

''புந்தியினால் நின்னடியைப் போற்றுகின்ற மெய்யடியார்

சிந்தைஇறப் போறின் தியானம் பராபரமே'' (பராபரக்கண்ணி: 982)

(மாணிக்கனார். அ., (1996), இரண்டாம் தொகுதி, ப. 189)

என தியானத்தின் முக்கியத்துவம் பற்றி குறிப்பிட்டுள்ளார். குணங்குடியார் புத்திக்கு அடங்காத அட்டாங்க யோகம் பற்றி முகியித்தீன் சதகத்திலும், அகத்தீசன் சதகத்திலும், நிராமயக்கண்ணியிலும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாயகன் நாயகி பாவம், அட்டமா சித்திகள், தவம் , முத்தி, குண்டலினி சக்தி, மூர்த்தி, தல, தீர்த்த வழிபாடு எனப் பல அம்சங்கள் இருவரது பாடல்களிலும் கருத்து ரீதியான ஒற்றுமையினைக் கொண்டுள்ளன.

இந்துசமயத்தில் இறைவனை அடைவதற்குரிய வழிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சைவநாற்பாதங்கள் காணப்படுகின்றன. இவற்றினை முறையே அரும்பு, மலர், காய் கனி என்பனவற்றுடன் ஒப்பிட்டு பின்வருமாறு பாடுகிறார் தாயுமானவர்,

''விரும்பு சரியைமுதல் மெய்ஞ்ஞாகன நான்கும்

அரும்புமலர் காய்கனி போலன்றோ பராபரமே'' (பராபரக்கண்ணி:792 )

(மாணிக்கனார். அ., (1996), இரண்டாம் தொகுதி,ப. 790)

இதே விடயத்தை குணங்குடியாரும் தமது பாடலில் பின்வருமாறு பாடியுள்ளார்.

''விரிந்த சரியைமுதல் மேவிநின்ற மெய்ஞ்ஞானம்

கரும்புமுதற் கண்டெனவுங் கண்டேன் நிராமயமே'' (நிராமயக்கண்ணி: 165)

(அப்துல் ரகுமான், (2002), ப.210)

இந்நான்கு விடயங்களையும் சூ.ஃபிக் கவிஞர்கள் ஷரீஅத், தரீகத், ஹகீகத் ம.ஃரிபத் எனக் கூறுவர். தாயுமானவர் கையாண்ட கடவுள் பெயர்கள், பக்தி நெறிக்குறியீடுகள் ஆகியவை கூட குணங்குடியாரின் பாடல்களில் அப்படியே கையாளப்பட்டுள்ளன. உதாரணமாக, நந்தீஸ்வரன், மனோன்மணி, வாலை, அம்பலம், சிவம், தட்சிணாமூர்த்தி, மூர்த்தி, திருநடனம், திருக்கூத்து, சிவயோகம், சின்மயம், பஞ்சாட்சரம், சரியை, கிரியை, யோகம், ஞானம், பசு, பதி, பாசம், முதலிய சொற்களைக் கூறலாம்.

தாயுமானவரின் பாடல்களின் போக்குகள், கருத்துப் பரிமாற்றங்கள், சொல்லாட்சிகள் ஆகியவற்றை மட்டுமன்றி வாழ்க்கை முறைகளையும் கூட, அப்படியே பின்பற்றி வாழ்ந்தவர் குணங்குடியார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது,

- தாயுமானவரும் குணங்குடியாரும் இரு வேறுபட்ட சமயங்களைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டாலும் இருவரது பாடல்களும் கருத்து ரீதியான ஒற்றுமையினை கொண்டுள்ளன என்பதனை வெளிக்கொண்டு வருதல்
- தாயுமானவர் கையாண்டுள்ள இந்து சமயம் சார்ந்த சொற்பிரயோகங்களை அதே வடிவில் குணங்குடியார் எந்தளவுக்குக் கையாண்டுள்ளார் என்பதனை அடையாளங்காணல்.
- தாயுமானவரை அடியொற்றி பாடல்களை புனைந்த குணங்குடியாரின் பாடல்கள் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து விலகி, இந்து சமயக் கோட்பாடுகளையே பிரதிபலிக்கின்றன என்பதனை வெளிக்கொண்டு வருதல்.

**ஆய்வுப் பிரச்சினை**

குணங்குடியாரும் தாயுமானவரும் இருவேறுபட்ட சமயங்களைச் சேர்ந்தவர்கள் எனினும் அவர்களது பாடல்கள் எவ்வாறு கருத்து ரீதியாக ஒத்து செல்கின்றன?

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் மஸ்தான் சாகிபுப் புலவரின் பாடல்கள் எந்தளவிற்கு தாயுமானவரின் பாடல்களை அடியொட்டி எழுந்துள்ளன என்பதனைக் கண்டறிவதற்கு இருவரது பாடல்களும் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளதோடு, மஸ்தான் சாகிபு எந்தளவுக்கு இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளோடு முரண்படுகிறார் என்பதனைக் காட்டுவதற்கு இஸ்லாத்தின்

அடிப்படைகளான அல்குர்ஆன் , ஹதீஸ் ஆகியவற்றின் கருத்துக்களோடு இவரது கருத்துக்கள் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளன. அதேவேளை, இருவரது பாடல்களிலும் இடம் பெற்றுள்ள விடயங்கள் விவரண ஆய்வு முறை மூலம் விளக்கப்பட்டுள்ளன.
இவ்வாய்வில் முதலாம் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவாக மஸ்தான் சாகிபுப் புலவரது பாடலகளும் தாயுமானவர் பால்களும், இரண்டாம் நிலைத்தரவாக நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவற்றில் ஆய்வோடு தொடர்பாக வெளிவந்த கட்டுரைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் முடிவு**

இஸ்லாத்தைப் பொருத்தவரை அல்லாஹ் மனிதனை அவனது அடியானாகவே படைத்துள்ளான். அந்த வகையில் இறைவனும் மனிதனும் வேறு வேறல்ல, இரண்டும் ஒன்று எனும் அத்வைதக் கோட்பாடானது இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாட்டுக்கு முற்றிலும் முரணானது. அதேவேளை, மனிதர்களையும் ஜின்களையும் என்னை வணங்குவதற்காகவன்றி படைக்கவில்லை என்று அல்லாஹ் கூறுகின்றான். இஸ்லாம் முழு வாழ்க்கைக்குமான வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. அதனால், அதில் ஒரு பகுதியை ஏற்று மற்றைய பகுதியைப் புறக்கணித்து வாழ முடியாது. சமூக வாழ்க்கையினின்றும் விலகி காடுகளில் துறவறம் கிடப்பதை இஸ்லாம் ஆதரிக்கவில்லை. அதேவேளை, உலகியல் இன்பங்களோடு தொடர்புபடுத்தி இறைவனை நோக்குகின்ற தன்மையானது, 'அல்லாஹ் எவ்வித தேவையுமற்றவன்' என்ற கோட்பாட்டோடு முரண்படுவது மட்டுமன்றி, இஸ்லாம் கூறுகின்ற பேச்சொழுக்கங்களையும் மீறுவதாக அமைந்துள்ளது. 'நாயகன் - நாயகி' பாவம் பல்லவர்கால பக்தி இலக்கியங்களிலிருந்து உள்வாங்கப்பட்டுன்ளன. அல்லாஹ்வை நாயகியாகவோ நாயகனாகவோ பாவனை செய்து பாடுவது இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மீறும் செயலாகவே அமைந்துள்ளது. அல்லாஹ்வை அழைப்பதற்கும் அழகிய திருநாமங்கள் உள்ளன. அவற்றை விட்டுவிட்டு, முற்றுமுழுதாக இன்னொரு கலாசாரத்தைப் பின்பற்றி கவி புனைந்திருப்பதனை மஸ்தான் சாஹிபிடம் காண முடியும். குணங்குடிமஸ்தான் சாகிபுப் புலவரின் பாடல்களில் இந்துசமயக் கருத்துக்கள் அதிகமாக உள்வாங்கப்பட்டுள்ளன. கடவுளை அருவம், உருவம், உறவு முறைகளில் நோக்கும் பாங்கு, அட்டாங்க யோகம், அட்டமாசித்திகள், மூர்த்தி, தல ,தீர்த்த வழிபாடு, பஞ்சமாபாதகங்கள், பஞ்சசுத்தி முதலிய இன்னோரன்ன விடயங்களில் இருவரது பாடல்களும் ஒத்துசெல்கின்றன. இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாட்டிலிருந்து விலகி, இந்துசமயக் கொள்கைகள் மஸ்தான் சாகிபுப் பாடல்களில் முனைப்புப் பெற்றுள்ளதனை அவதானிக்க முடிகிறது.

**உசாத்துணை நூல்கள்**


1) அப்துல் ரகுமான், (2002) குணங்குடியார் பாடற்கோவை, சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

2) க்ரியாவின் தற்காலத் தமிழகராதி, தமிழ்-தமிழ் - ஆங்கிலம். தஞ்சாவூர் பல்கலைக்கழகம், 2006.

3) கழகத் தமிழகராதி, (2004), கழகப் புலவர் குழு, கழக வெளியீடு.

4) பார்த்தசாரதி அய்யங்கார், 1940, தாயுமான சுவாமிகள் பாடற் திரட்டு, சென்னை.

5) மாணிக்கனார், அ., (1996), தாயுமானவர் திருப்பாடல்கள், மூலமும் உரையும், முதல் தொகுதி, சென்னை: வர்த்தமானன் பதிப்பகம்.

6) மாணிக்கனார், அ., (1996), தாயுமானவர் திருப்பாடல்கள், மூலமும் உரையும், இரண்டாம் தொகுதி, சென்னை: வர்த்தமானன் பதிப்பகம்.

7) வடிவேலு முதலியார், மா., (2004), குணங்குடி மஸ்தான் சாகிபு பாடல்கள், முல்லை நிலையம்: சென்னை.

8) வாழ்வியற் களஞ்சியம், (1994), தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகம்.

9) ஸ்ரீ ராமகிருஷண தபோவனம், திருச்சி: திருப்பராய்த்துறை.

10) ஹஸ்ஸான், (1999), இஸ்லாத்தை மறந்த இலக்கியங்கள், மதுரை: இஸ்லாமிய கல்வி வெளியீட்டு நிறுவனம்.

11) Tamil Lexicon, (1982) , Vol -1, University of Madras.